# வேலைவாய்ப்பு முகாம்

விக்கிரவாண்டி,ஜன.31-

விக்கிரவாண்டி சூரியா இன்ஜினியரிங் கல்லூரியில், வேலை வாய்ப்பு முகாம் நடந்தது.

விக்கிரவாண்டி சூரியா இன்ஜினியரிங் கல்லூரியில் நடந்த வேலை வாய்ப்பு முகாமிற்கு கல்லூரி சேர்மன் டாக்டர் கவுதம சிகாமணி தலைமை தாங்கினார். செயலாளர் டாக்டர் அசோக் சிகாமணி முன்னிலை வகித்தார். சென்னை வோலெக்ஸ் இன்டர் கனெக்ட் நிறுவனம் மற்றும் புதுச்சேரி யுகால் பியுவல் கம்பெனி சார்பில் நேர்க்காணல் நடந்தது. இதில் 30 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டனர் .

கல்லூரி டீன் ஜெயச்சங்கர், மாணவர்களுக்கு பணி நியமன ஆணையை வழங்கினார். நிர்வாகி விசாலாட்சி பொன்முடி வாழ்த்தி பேசினார்.

சூரியா கல்வி குழும வேலை வாய்ப்பு துறை அலுவலர் சந்தான கிருஷ்ணன் நன்றி கூறினார்.



விக்கிரவாண்டி சூரியா இன்ஜினியரிங் கல்லூரியில் நடந்த வேலை வாய்ப்பு முகாமில், தேர்வான மாணவர்களுக்கு டீன் ஜெயச்சங்கர் பணி நியமன ஆணை வழங்கினார் .